7th November 1966]

யிலும் அங்குள்ள அதிகாரிகள் வேடிக்கையாக பார்த்துக்கொண்டு, அதற்கு ஆதரவாக இருந்தார்களா? இப்படி நடப்பதை தடுப்பதற்கு முயற்சி செய்தார்களா? தடுக்கவில்லை என்றால் அந்த அதிகாரிகள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது டெலிபிரேட்டாக 'ஃப்ரன்ட் சைடில்' நடைபெறவில்லை. 'பேக் சைடில்' ஒரு சில நிமிடங்களில் நடந்திருப்பதாக தகவல். ஆகவே, இதை முன்கூட்டியே தடுத்திருக்கவேண்டும் என்பதற்கு வழியில்லை.

திரு. எம். எஸ். மணி: இவ்வித ஒழுங்கீனம் நடந்த திருச்சி நகராட்சி மன்றத்தை கலைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இது தனிப்பட்ட அங்கத்தினர் ஒருவரின் தவறு. இது நகராட்சி மன்றத்தின் தவறு என்று கனம் அங்கத்தினர் அவர்கள் நினைக்கிறார்களா? (சிரிப்பு)

கனம் சபாநாயகர்: நீங்களும் அவரைக் கேட்டால் எப்படி? கௌன்ஸிலுக்கு இதில் பொறுப்பில்லை என்று வேண்டுமானால் சொல்லுங்கள்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர் ஒருவருடைய தவறுக்கு கௌன்ஸில் பொறுப்பாகாது என்பது என்னுடைய எண்ணம்.

Mofussil bus stand in City

*497 Q.—SRI A. RAGHAVA REDDI: Will the Hon. the Minister for Local Administration be please to state—

(a) whether there is a proposal to shift the Mofussil Bus Stand from Basin Bridge to Mint from where it was shifted when the work of constructing a bridge was taken up: and

(b) if so, when it will be implemented?

கனம் திரு. சே. ம. மஜீத்: (அ) & (இ) இவ்விஷயம் ஆலோசனையிலிருந்து வருகிறது.

நகரசபை உப தேர்தல்கள்

*498 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேச அவசர நிலையையொட்டி தற்போதைக்கு நகரசபை உப தேர்தல்களை ஒத்திவைக்கும்படி தமிழ்நாடு அரசு உத்திரவு போட்டதா?

[7th November 1966

(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிகளில் ஏற்பட்டுள்ள தற்காலிக காலியிடங்களுக்குரிய தேர்தலைப் பின்னர் குறிக்கப்படும் தேதிக்குத் தள்ளிப்போடுமாறு தேசிய நெருக்கடி காரணமாக அரசாங்கம் ஆணையிட்டுள்ளது. தமிழ் நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 8-வது பிரிவைச் சேர்ந்த 4-எ உட்பிரிவின் கீழ் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு இவ்வாறு ஆணையிடப்பட்டுள்ளது.

நகரசபைகள்

* 499 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நகரசபையில் 1965 நவம்பரிலிருந்து பண நெருக்கடி ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் என்றால் காரணம் என்ன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரி விதத்தை மாற்றியமைப்பது குறித்து ரிவிஷன் மனுக்கள் ஏராளமாக வந்ததாலும், அந்த மனுக்களின்மீது முடிவெடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், முக்கிய வருவாய் ஆதாரமாகிய சொத்து வரி குறித்த வரித் தொகை அறிக்கைகள் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதாலும் அந்த நகரசபையில் பண நெருக்கடி ஏற்பட்டது.

திரு. கரு. சீமைச்சாமி: ஸார், மதுரை நகர சபை பண நெருக்கடி காரணமாக ஸ்தம்பித்து விட்டது. அங்குள்ள தொழிலாளர்களுக்குச் சம்பளம் போடவில்லை. இதற்குக் காரணம் பட்ஜெட் எஸ்டிமேட்டில் ப்ரொவிஷன் இல்லாமலேயே 10 லட்சம் ரூபாய்க்கு லாரிகள் வாங்கப்பட்டும், 12 லட்சம் ரூபாய்க்கு பைப்புகள் போடப்பட்டும் இருக்கிறது. இதுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது. பட்ஜெட்டில் ப்ரொவிஷன் இல்லாமல் எப்படி நிறைவேற்றினார்கள்? அரசாங்கம் இதற்கு அனுமதி கொடுத்ததா? ஸ்தம்பித்ததற்கு இதுதான் காரணமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: முக்கிய கேள்விக்கு என்ன பதில் அளித்தேனோ அதுதான் காரணம்; கனம் அங்கத்தினர் சொல்லுவது போல் இல்லை. பப்ளிக் ஹெல்த், எஜுகேஷன் ஸைடில் ஸ்டாஃபை அதிகமாக நியமித்ததால் அதன் மூலம் பணம் அதிகமாகச் செலவு ஆகியது. க்வின்க்வெனியல் ரிவிஷனில், முக்கிய கேள்விக்கு பதில் அளித்தது போல், ஏற்பட்ட தாமதத்தைத் தவிர வேறு காரணம் இல்லை.